1992 செப்டம்பர் 21]

முற்பகல் 11.55

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஈ) முதல் துணை நிதிநிலை அறிக்கை 1992–93—வெட்டுத் தீர்மானங்கள் அளித்தல்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் ; பேரவைக்கு ஓர் அறிவிப்பு. 1992-93ஆம் ஆண்டிற்கான செலவு குறித்த முதல் ஆணை நிதிநிலை அறிக்கையில் கண்டுள்ள மானிய கோரிக்கைகளின் மீது வெட்டுத் தீர்மானங்கள் கொடுக்க விரும்புகிற உறுப்பினர்கள் அவைகளை பேரவை 190-வது விதிக்கிணங்க 22—9—1992 செவ்வாய்க்கிழமை மாலை 3 மணிக்குள் பேரவைச் செயலகத்தில் சேர்க்கலாம் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

பேரவையின் இன்றைய நிகழ்ச்சிகள் இத்துடன் முடிவுற்றன. பேரவை மீண்டும் நாளைக் (22—9—1992) காலை 9-30 மணிக்குக் கூடும். வணக்கம்.

பின்னர் பேரவை 11-56 மணிக்கு ஒத்திவைக்கப்பெற்றது.

11. பேரவைமுன் வைக்கப்பெற்ற ஏடுகள்.

அ. சட்டப்படிக்கான விதிகளும், ஆணைகளும்.

1. மாற்றுப் பேருந்து மற்றும் நிலைய ஊர்திகளுக்கு வரி விகிதத்தை குறைப்பது குறித்து உள் (போ) துறையின் 10—1—1992-ஆம் நாளிட்ட 67-ஆம் எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. [தமிழ்நாடு 1974-ஆம் ஆண்டு இயக்கூர்திகள் வரிவிதிப்புச் சட்டத்தின் தமிழ்நாடு சட்டம் 13/1974) 25 (2) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது]

2. தமிழ்நாடு 1990-ஆம் ஆண்டு நாட்டு மதுபான (மொத்தமாக அளித்தல்) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள், மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 8—3—1991-ஆம் நாளிட்ட 71-வது எண். அரசாணையில் வெளியிடப்பட்ட அறிவிக்கை. (தமிழ்நாடு 1937-ஆம் ஆண்டு மதுவிலக்குச் சட்டத்தின் (தமிழ்நாடு சட்டம் 10/1937) 54(3) பிரிவின் கீழ் பேரவை முன் வைக்கப் பெற்றது).

3. தமிழ்நாடு 1981-ஆம் ஆண்டு மதுபான (உரிமம் மற்றும் அனுமதி) விதிகளில் திருத்தமொன்று செய்வது குறித்து உள் மதுவிலக்கு மற்றும் ஆயத் தீர்வைத் துறையின் 4—9—1990